SET-4

Series &RQPS

प्रश्न–पत्र कोड
Q.P. Code **6**

रोल नं.
Roll No.

परीक्षार्थी प्रश्न–पत्र कोड को उत्तर–पुस्तिका के मुख–पृष्ठ पर अवश्य लिखें ।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

**नोट**

(I) இந்த வினாத்தாளில் அச்சிடப் பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரி பாரார்க்கவும்.

(II) **இந்த வினாத்தாளில் 15 வினாக்கள் உள்ளனவா எனச் சரி பார்க்கவும்.**

(III) வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை **(Code No.)** விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்

(IV) எழுதத் தொடங்குவதற்கு முன் வரிசை எண்ணைக் கு றிப்பிடவும்.

(V) வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந் நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

**NOTE**

(I) Please check that this question paper contains **15** printed pages.

(II) Please check that this question paper contains **15** questions.

(III) Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.

(IV) **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**

(V) 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்
# TAMIL

கால அளவு : **3** மணி | மொ. மதிப்பெண்கள் : **80**

Time allowed : **3** hours | Maximum Marks : **80**

**General Instructions :**

*பொதுவான வழிமுறைகள் :*

1. This question paper contains **FIVE** Sections.

   *இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.*

2. **Section A :** Contains **2** Questions. [Question Number from **1** to **2**]

   *பிரிவு அ* – **2** *வினாக்களைக் கொண்டுள்ளது.* [*வினா எண்* **1** *முதல்* **2** *வரை*]

3. **Section B :** Contains **4** Questions. [Question Number from **3** to **6**]

   *பிரிவு ஆ* – **4** *வினாக்களைக் கொண்டுள்ளது.* [*வினா எண்* **3** *முதல்* **6** *வரை*]

4. **Section C :** Contains **4** Questions. [Question Number from **7** to **10**]

   *பிரிவு இ* – **4** *வினாக்களைக் கொண்டுள்ளது.* [*வினா எண்* **7** *முதல்* **10** *வரை*]

5. **Section D :** Contains **2** Questions. [Question Number from **11** to **12**]

   *பிரிவு ஈ* – **2** *வினாக்களைக் கொண்டுள்ளது.* [*வினா எண்* **11** *முதல்* **12** *வரை*]

6. **Section E :** Contains **3** Questions. [Question Number from **13** to **15**]

   *பிரிவு உ* – **3** *வினாக்களைக் கொண்டுள்ளது.* [*வினா எண்* **13** *முதல்* **15** *வரை*]

7. Attempt as per specific instructions for each Question.

   *ஒவ்வொரு வினாக்களின் தலைப்புகளிலும் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

8. Please write down the serial no. of the question in the answer book before attempting it.

   *பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.*

## பகுதி – அ (படித்தல் – 10 மதிப்பெண்கள்)

## SECTION – A (Unseen Passage – 10 Marks)

1. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு விடை தருக : **5 × 1 = 5**

வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும், இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது. 'தொல் லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' – என்று கண்ணகி வருந்துகிறாள். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. இவ்விருந்து 'முகந்திரிந்து நோக்கக் குழையும்' எனக் குறள் கூறுகின்றது. சங்க கால குடும்பத் தலைவி 'அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்' என்று நற்றினை குறிப்பிடுகின்றது.

வினாக்கள் :

I. திருக்குறளில் விருந்தோம்பல் என்ற அதிகாரம் எவ்வியலில் உள்ளது ?

(A) ஊழியியல் (B) துறவறவியல்

(C) அரசியல் (D) இல்லறவியல்

II. 'விருந்தே புதுமை' என்று கூறியது யார்?

(A) இளங்கோவடிகள் (B) திருவள்ளுவர்

(C) தொல்காப்பியர் (D) ஒக்கூர் மாசாத்தியார்

III. ‘அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்’ – இவ்வரி எந்நூலில் உள்ளது ?

(A) அகநானூறு (B) நற்றினை

(C) திருக்குறள் (D) புறநானூறு

IV. தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை எது ?

(A) தனித்து உண்ணுதல் (B) இரந்து உண்ணுதல்

(C) தனித்து உண்ணாமை (D) மறைத்து உண்ணுதல்

V. ‘தொல்வோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை’ – என்று வருந்துவது யார் ?

(A) கண்ணகி (B) சீதை

(C) தமயந்தி (D) பாஞ்சாலி

2. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : **5 × 1 = 5**

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன மக்கள் பண்பாட்டின் பதிவுகளான நிகழ்கலைகள். சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளை எடுத்துக் கூறுவனவாகத் திகழ்பவை நிகழ்கலை. இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. அக்கலைகளுள் ஒன்று மயிலாட்டம். மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டமாகும். கா – என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள். இரு முனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டமாகும். இக்காவடி ஆட்டம் இலங்கை, மலேசியா

உட்பட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் ஆடப்படுகிறது. ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டியும், காலில் சலங்கை அணிந்தும், கையில் வைத்துள்ள சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டமாகும். இந்நிகழ் கலைகள் மக்களின் சமய வழிபாட்டிலும், வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்க முடியாத பண்பாட்டுக் கூறுகளாக விளங்குகின்றன.

வினாக்கள் :

I. மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குவது எது ?.

II. மயிலாட்டம் என்றால் என்ன?

III. காவடியாட்டம் எந்தெந்த நாடுகளில் ஆடப்படுகிறது ?

IV. ஒரு குழு ஆட்டமாக ஆடப்படுவது எது ?

V. மயிலாட்டத்தின் போது பயன்படுத்தப்படும் மேளம் எது ?

## பகுதி-ஆ (இலக்கணம் – 12 மதிப்பெண்கள்)

## SECTION – B (Grammar – 12 Marks)

3. பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக : (எவையேனும் 3 மட்டும்) $3 \times 1 = 3$

I. காளையில் எழுந்து படிப்பது நல்ல பலக்கமாகும்.

(A) காலையில் எளுந்து படிப்பது நல்ல பலக்கமாகும்.

(B) காலையில் எழுந்து படிப்பது நல்ல பலக்கமாகும்.

(C) காலையில் எழுந்து படிப்பது நல்ல பழக்கமாகும்.

(D) காளையில் எழுந்து படிப்பது நல்ல பழக்கமாகும்.

II. நாளும் அரம் செய்ய விறும்பு

(A) நாலும் அரம் செய்ய விரும்பு

(B) நாளும் அறம் செய்ய விரும்பு

(C) நாளும் அரம் செய்ய விரும்பு

(D) நாலும் அறம் செய்ய விரும்பு

III. அவன் பன்து அடித்ததால் மன்பானை உடைந்தது

(A) அவன் பந்து அடித்ததால் மன்பாணை உடைந்தது

(B) அவன் பன்து அடித்ததால் மண்பானை உடைந்தது

(C) அவன் பன்து அடித்ததால் மன்பாணை உடைந்தது

(D) அவன் பந்து அடித்ததால் மண்பானை உடைந்தது

IV. வலம் பல பெற்று நளத்துடன் வாழ்க!

(A) வளம் பள பெற்று நளத்துடன் வாழ்க!

(B) வலம் பல பெற்று நலத்துடன் வாழ்க!

(C) வளம் பல பெற்று நலத்துடன் வாழ்க

(D) வலம் பள பெற்று நலத்துடன் வாழ்க

V. தமிள் நாட்டின் தலைநகறம் சென்னை

(A) தமிழ் நாட்டின் தலைநகரம் சென்னை

(B) தமிழ் நாட்டின் தலைநகறம் சென்னை

(C) தமிழ் நாட்டின் தளைநகரம் சென்னை

(D) தமிள் நாட்டின் தலைநகரம் சென்னை

4. வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக.

*(மூன்று மட்டும்))* **3 × 1 = 3**

I. ஆத்திர காரனுக்கு புத்திமட்டு என்பதுப் பழமொழி

(A) ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு என்பதுப் பழமொழி

(B) ஆத்திரக் காரனுக்கு புத்திமட்டு என்பது பழமொழி

(C) ஆத்திர காரனுக்குப் புத்திமட்டு என்பது பழமொழி

(D) ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு என்பது பழமொழி

II. உயர பறந்தாலும் ஊர்குருவி பருந்தாகுமோ

(A) உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ

(B) உயர பறந்தாலும் ஊர்க்குருவிப் பருந்தாகுமோ

(C) உயரப் பறந்தாலும் ஊர்குருவிப் பருந்தாகுமோ

(D) உயரப் பறந்தாலும் ஊர்குருவி பருந்தாகுமோ

III. அந்த தோட்டத்தில் உள்ள பூசெடிக்குத் தண்ணீர் ஊற்று

(A) அந்தத் தோட்டத்தில் உள்ள பூசெடிக்கு தண்ணீர் ஊற்று

(B) அந்த தோட்டத்தில் உள்ள பூச்செடிக்கு தண்ணீர் ஊற்று

(C) அந்த தோட்டத்தில் உள்ள பூச்செடிக்குத் தண்ணீர் ஊற்று

(D) அந்தத் தோட்டத்தில் உள்ள பூச்செடிக்குத் தண்ணீர் ஊற்று

IV. கண்ணன் தினமும் ஒரு பாடத்தை படித்ததாக கூறினான்

(A) கண்ணன் தினமும் ஒருப்பாடத்தைப் படித்ததாக கூறினான்

(B) கண்ணன் தினமும் ஒருபாடத்தை படித்ததாகக் கூறினான்

(C) கண்ணன் தினமும் ஒருபாடத்தைப் படித்ததாகக் கூறினான்

(D) கண்ணன் தினமும் ஒருப்பாடத்தை படித்ததாகக் கூறினான்

V. பத்து பாட்டும் எட்டு தொகையும் எனக்குப் பாடம்

(A) பத்துப் பாட்டும் எட்டுதொகையும் எனக்கு பாடம்

(B) பத்து பாட்டும் எட்டுத் தொகையும் எனக்குப் பாடம்

(C) பத்துப் பாட்டும் எட்டு தொகையும் எனக்குப் பாடம்

(D) பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் எனக்குப் பாடம்

5. *எடுத்துக் காட்டு எழுதுக : (மூன்று மட்டும்)* **$3 \times 1 = 3$**

I. *பிறவினை*

(A) கண்ணன் மாறுவான்

(B) கண்ணன் மாறினான்

(C) கண்ணன் மாற்றுவான்

(D) கண்ணன் மாறுகின்றான்

II. *செயப்பாட்டு வினை*

(A) மதுரையைக் கண்ணகி எரித்தாள்

(B) கண்ணகி மதுரையை எரித்தாள்

(C) மதுரைக்கு கண்ணகி தீவைத்தாள்

(D) மதுரை கண்ணகியால் எரிக்கப்பட்டது

III. நேர்க்கூற்று

(A) தான் புத்தகம் கொண்டு வருவதாகச் செல்வி கூறினாள்

(B) 'நான் புத்தகம் கொண்டு வருகிறேன்' என்று செல்வி கூறினாள்

(C) புத்தகம் கொண்டு வருவதாகச் செல்வி கூறினாள்

(D) தான் புத்தகம் எடுத்து வருவதாகச் செல்வி கூறினாள்

IV. தன் வினை

(A) கண்ணன் இலக்கணம் பயின்றான்

(B) கண்ணன் இலக்கணம் பயின்றான் அல்லன்

(C) கண்ணன் இலக்கணம் பயின்றிலன்

(D) இலக்கணம் கண்ணன் பயின்றானோ

V. செய்வினை

(A) நம்பியால் பந்து உதைக்கப்பட்டது

(B) இப்பந்தோ நம்பியால் உதைக்கப்பட்டது

(C) நம்பி பந்தை உதைத்தான்

(D) பந்தை நம்பிதான் உதைத்தானோ?

6. வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக (மூன்று மட்டும்): **3× 1 = 3**

I. (A) மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கின

(B) மாமரங்கள் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கியது

(C) மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கியது

(D) மாமரம் பூத்துக் காய்த்துக் கனிந்து குலுங்கியவை

II. (A) ஆந்தை அலறும் குயில் கூவும்

(B) ஆந்தை கத்தும் குயில் அகவும்

(C) ஆந்தை கரையும் குயில் கத்தும்

(D) ஆந்தை கத்தும் குயில் கரையும்

III. (A) குரங்குகள் மரத்தில் தாவினர்

(B) குரங்குகள் மரத்தில் தாவினார்கள்

(C) குரங்குகள் மரத்தில் தாவியது

(D) குரங்குகள் மரத்தில் தாவின

IV. (A) நமது தேசியக் கொடியில் மூவண்ணம் உள்ளது

(B) நமது தேசியக் கொடியில் மூவண்ணம் உள்ளன

(C) நமது தேசியக் கொடியில் மூவண்ணங்கள் உள்ளன

(D) நமது தேசியக் கொடியில் மூவண்ணங்கள் உள்ளது

V. (A) அவ பேச்சில் ஏன் இந்த தடுமாற்றம்

(B) அவன் பேச்சில் ஏன் இந்தத் தடுமாட்டம்

(C) அவ பேச்சில் ஏன் இந்தத் தடுமாட்டம்

(D) அவன் பேச்சில் ஏன் இந்தத் தடுமாற்றம்

பகுதி – இ (இலக்கியம் – 31 மதிப்பெண்கள்)

**SECTION – C (Main Course Book – 31 Marks)**

7. பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி : **5 × 1 = 5**

ஓங்கவிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி

ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்

மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது

தன்னேர் இலாத தமிழ்

வினாக்கள்

I. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(A) குறுந்தொகை (B) பரிபாடல்

(C) புறநானூறு (D) தண்டியலங்காரம்

II. இந்நூல் எவ்விலக்கணத்தைப் பற்றியது ?

(A) எழுத்து (B) சொல்

(C) யாப்பு (D) அணி

III. இச்செய்யுளில் 'ஏனையது' - என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார் ?

(A) தமிழ் (B) ஞாயிறு

(C) உலகம் (D) கடல்

IV. இச்செய்யுள் எவ்வகைப் பாவால் எழுதப்பட்டது ?

(A) ஆசிரியப்பா (B) கலிப்பா

(C) நேரிசை வெண்பா (D) குறள் வெண்பா

V. இச்செய்யுளில் அமைந்துள்ள அணி ________ அணியாகும்.

(A) பிறிது மொழிதல்

(B) பொருள் வேற்றுமை அணி

(C) எடுத்துக்காட்டுவமை

(D) சொற்பொருள் பின்வருநிலை

8. பின்வரும் பத்தியை படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி : **5 × 1 = 5**

தென்னிந்தியாவின் நுழைவாயில் என்றழைக்கப்படும் சென்னை இன்று தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம் அவ்வகையில் இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும் வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று. இன்று சென்னை என்று அழைக்கப்படும் பகுதியும் அதன் சுற்றுப் பகுதிகளும் வரலாற்றுக்கு முந்தைய காலத்திலிருந்தே மனிதன் வாழ்ந்ததற்கான தடயங்களைக் கொண்டுள்ளன. பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் கோடரி இந்திய அகழ்வாய்த்துறை வரலாற்றில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்தியது. இன்று சென்னையின் ஒரு பகுதியாக விளங்கும் மயிலாப்பூர் கி.பி. (பொ. ஆ.) 2 – ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் ‘மல்லியர்பா’ எனும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது. பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டது. இங்குள்ள கல்வெட்டைச் சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு எனலாம். சேத்துப்பட்டு (சேற்றுப்பட்டு), நுங்கம்பாக்கம், வியாசர்பாடி, மாதவரம், கோயம்பேடு, தாம்பரம் போன்ற பகுதிகள் கிழக்கிந்திய நிறுவனம் கால் பதிப்பதற்கு 400 ஆண்டுகளுக்கு முன்னரே 12-13 ஆம் நூற்றாண்டுகளில் புகழ் பெற்ற கிராமங்களாக இருந்துள்ளன.

வினாக்கள்:

I. தமிழகத்தின் தலைநகரம் எது?

II. இந்திய அகழ்வாய்த்துறை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது எது?

III. பல்லாவரத்தில் உள்ள பல்லவர் குடைவரை யாருடைய காலத்தில் அமைக்கப்பட்டது?

IV. 'மல்லியர்பா' - என்று தாலமி எதனைக் குறிப்பிடுகின்றார்?

V. சேற்றுப்பட்டு என்று அழைக்கப்பட்ட பகுதியின் இன்றைய பெயர் யாது?

9. பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடை எழுதுக : **$2 \times 3 = 6$**

I. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாடத் தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

II. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

III. சவரி இராமனிடம் யாது கூறி உபசரித்தாள்?

IV. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி : **$3 \times 5 = 15$**

I. மொழி சார்ந்த பொருள் மொழி சார்ந்த கலையாக ஆகிவிடுகிறது விளக்குக.

II. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

III. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றையக் கூட்டுக் குடும்பம். எவ்வாறு ? விளக்குக.

IV. சென்னை, அறிவின் நகரம் என்று வழங்கப்படுவதற்கான காரணங்களை விவரி.

V. நடையியல் – விளக்குக.

### பகுதி –ஈ (துணைப்பாடம் – 12 மதிப்பெண்கள்)

### SECTION – D (Non-detail – 12 Marks)

11. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக : **1 × 7 = 7**

I. முதல்கல்

II. தலைக்குளம்

III. உரிமைத்தாகம்

12. கீழக்காணும் கதை மாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக. **1 ×5 = 5**

I. பிரேம் குமார்

II. வெள்ளைச்சாமி

### பகுதி – உ (படைப்புத்திறன் – 15 மதிப்பெண்கள்)

### SECTION – E (Creative Writing – 15 Marks)

13. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக. **1 × 6 = 6**

I. உன் பகுதியில் நடைபெறும் புத்தகக் கண்காட்சியைக் காண வருமாறு நண்பனுக்குக் கடிதம் வரைக.

II. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக் கோரி மின் வாரிய தலைமைப் பொறியாளருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

*(இரு கடிதங்களுக்கும் உன் முகவரி இ. அமுதன்/இ. அமுதா, 42, திருவள்ளுவர் சாலை, போரூர், சென்னை-116)*

14. கடைசி இரண்டு பந்துகளில் சென்னை சூப்பர் கிங்கை வெற்றி பெறச் செய்த இரவீந்திர ஜடேஜாவை நேர்காணல் செய்க. **1 × 3 = 3**

15. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக. **1 × 6 = 6**

I. அ. அன்றாட வாழ்வில் அறிவியல்

II. ஆ. தேசிய நதிநீர் இணைப்புத் திட்டம்

III. இ. கிராமங்களின் உயர்வே நாட்டுயர்வு.